## "நாட்டார் பாடல்களில் தொழிலாளர் பிரச்சினைகள்: வெலிமடைப் பிரதேச தமிழ்-சிங்கள தொழிற்பாடல்களை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு"


**Supervisor**
*Mrs. MASF. Saadhiya Fowzer,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. S. Shanmugapriya,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


### ஆய்வுச் சுருக்கம்


படிப்பறிவில்லாத பாமர மக்களால் தொன்றுதொட்டு வழங்கி வரும் வாய்மொழி இலக்கியம் நாட்டுப்புற இலக்கியம் அல்லது நாட்டார் இலக்கியம் என்று வழங்கப்படுகிறது. ஆரம்பத்தில், இது வழிவழியாகப் பாடப்பட்டு வந்தது. சமீபகாலங்களில்தான் இவற்றைப் பதிவு செய்யத் தொடங்கியுள்ளனர். இது நாட்டுப்புற மக்களின் நாகரிகம், பண்பாடு, நம்பிக்கைகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்கின்றது.

*கிராமியக் கவிகள்: தாலாட்டு, ஒப்பாரி, சிறுவர் பாடல்கள்,* கதைப்பாடல்கள், தொழிற்பாடல்கள், பொல்லடிப்பாடல்கள், மாப்பிள்ளை வாழ்த்து, ஊஞ்சல் பாட்டு என்பவை நாட்டுப்புற பாடல்களாக விளங்குகின்றன. இவை அம்மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை, நம்பிக்கைகள் முதலியவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இவற்றுள், தொழிற்பாடல்களை மையப்படுத்தியே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிலாளர்கள், தொழில் புரியும் போது, துன்பத்திலிருந்தும் களைப்பிலிருந்தும் விடுபட தனித்தோ, சேர்ந்தோ, பாடல்களை பாடுவர். இதனையே தொழிற்பாடல் என்பர். கூட்டாக வேலை செய்யும் பொழுது உடல் அசைவின் ஒத்திசைக்கு இயைந்த பாடல்கள் தோன்றின. அவையே தொழிற்பாடல்கள் என்கிறார் கா.கைலாசபதி.

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் வெலிமடை பிரதேசம் அமைந்துள்ளது. இங்கு நெல், மரக்கறி, தேயிலை முதலியன பயிரிடப்படுகின்றன. இங்கு இப்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் தமிழ், சிங்கள தொழிலாளர்களின் மத்தியில் பல்வேறு நாட்டார் பாடல்கள் காணப்படுகின்றன. ஆனாலும், இவை இதுவரையில் எவராலும் தொகுக்கப்படவோ ஆய்வுக்கு உட்படுத்தப்படவோ இல்லை.

வெலிமடைப் பிரதேசத்தில் வழங்கிவரும் தமிழ்-சிங்கள நாட்டார் தொழிற்பாடல்களை இனங்கண்டு, அவை எந்தளவுக்கு வெலிமடைப் பிரதேச தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் பிரதிபலிக்கின்றன என்பதனைக் வெளிக்கொண்டு வருவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். தமிழ்-சிங்கள நாட்டார் தொழிற்பாடல்களில் இப்பிரதேச பேச்சு மொழியின் செல்வாக்கு எந்தளவுக்குக் காணப்படுகின்றது என்பதனைக் கண்டறிவதும் இவ்வாய்வின் மற்றுமொரு நோக்கமாகும்.

இவ்வாய்வில் முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வெலிமடை பிரதேச தொழிலாளர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களும் நாட்டார் பாடல்களும் முதலாம் நிலைத் தரவுகளாகவும் இவ்வாய்வோடு தொடர்பாக இதுவரை எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் முதலியன இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வில் சமூகவியல், மொழியியல், ஒப்பியல், விளக்கமுறை முதலிய அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வெலிமடைப் பிரதேசத்திலிருந்து பெறப்பட்ட தமிழ், சிங்கள நாட்டார் பாடல்களில் தொழில்சார், தொழிலாளர்சார் பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், இப்பிரதேச நாட்டார் பாடல்களில் இப்பிரதேச மக்களின் பேச்சு வழக்கினை சிறப்பாக இனங்காண முடியும்.

**விளக்கச்சொற்கள்:** நாட்டார் பாடல், தொழிற்பாடல்